**ஹொரன நகர சபை**

**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 360,503 செலவினத்திற்குக் கடன் கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புகளது பெறுமதி ரூபா 15,821,566 ஆகும். இது ரூபா 15,751,244 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் நிலையான வைப்புகளது பெறுமதி ரூபா 70,322 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருவாய் ரூபா 1,404,877 ஆகும். இது ரூபா 1,360,673 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருவாய் மற்றும் பெற வேண்டிய வட்டி வருவாய் என்பன ஒவ்வொன்றும் ரூபா 44,204 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரியதும் மீளாய்வாண்டில் பெறப்பட்டதுமான ரூபா 7,622,089 முத்திரைக் கட்டண வருவாய் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாது ஆண்டிற்கான வருவாயாகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான வருவாய் ரூபா 7,622,089 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 2.2.1(எ) திருத்தஞ் செய்யப்படுவதன் பொருட்டு வருவாய் நிலுவைக் கணக்கில் ரூபா 51,500 வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கில் ரூபா 51,500 செலவு வைக்கப்பட வேணடுமாயினும், ஏனைய வருவாய்க் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் திரண்ட மீதிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுமிருந்ததால் வருவாய் நிலுவைக் கணக்கு ரூபா 51,500 குறைவாகவும் மீளாய்வாண்டிற்கான ஏனைய வருவாய்க் கணக்கு ரூபா 51,500 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 92,049,649 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

---

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 21,329,552 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 16,034,684 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,294,868 அதிகரிப்பு தென்பட்டது.

## 2. வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 17,592 | 15,742 | 6,302 |
| (ii) | குத்தகை வாடகை | 4,853 | 4,853 | 1,476 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 180 | 180 | - |

### 2.2.1 தீர்வையும் வரியும்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த ரூபா 5,681,131 தீர்வை வரி நிலுவையில் ஆண்டின்போது 60 சதவீதமான ரூபா 3,410,216 அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கெனப் பட்டியலிடப்பட்ட தீர்வை வரி வருவாய் ரூபா 14,865,461 ஆகும். அதில் 88 சதவீதமான ரூபா 13,035,794 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 டிசெம்பர் 31 ஆந் திகயதிளவில் அறவிடப்பட வேண்டியிருந்த தீர்வை வரியினது மீதி ரூபா 5,204,367 ஆகும். அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதியான ரூபா 1,256,057 , 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதியான ரூபா 359,343 , 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதியான ரூபா 262,801 என்பன உள்ளடங்கியிருந்தன. இதற்கமைய, தீர்வை வரி நிலுவையை அறவிடுவது நலிவுற்றிருப்பது அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 வர்த்தக வரி

------------------------

2016 ஆம் ஆண்டின் பொருட்டுப் பட்டியலிடப்பட்ட வர்த்தக வரி ரூபா 2,005,080 ஆகும். அதில் ரூபா 1,990,080 அறவிடப்பட்டிருந்தது. மீதித் தொகையான ரூபா 15,000 ஆண்டின்போது அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை.

### 2.2.4 கடை வாடகை

--------------------------------

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த ரூபா 1,499,302 கடை வாடகையில் ஆண்டின்போது ரூபா 841,022 அல்லது 56 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட வருவாய் நிலுவை அறிக்கை மற்றும் கடை வாடகைப் பதிவேடு என்பவற்றுக்கிடையே ரூபா 451,179 வித்தியாசமிருந்தது அவதானிக்கப்பட்டது. தொடர்ச்சியாக வரும் இவ்வித்தியாசத்திற்கான காரணத்தை விளக்குவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(இ) கடை வாடகையை அறவிடுவதற்கு விலை மதிப்புத் திணைக்களம் வழங்கிய மதிப்பிடப்பட்ட தொகை பயன்படுத்தப்படாது புதிய மதிப்பீட்டிற்கு முன்னரான கடை வாடகை மற்றும் விலை மதிப்புத் திணைக்களம் வழங்கிய மதிப்பீட்டுத் தொகை என்பவற்றுக்கிடையேயான வித்தியாசத்தில் 50 சதவீதத்தை அதனுடன் சேர்த்து அறவீடு மேற்கொள்ளப்பட்டமையால் சபை பெருமளவு வருவாயை இழந்திருந்தது.

### 2.2.5 வாகனத் தரிப்பிடக் கட்டணம்

--------------------------------------------------------

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள இடங்களில் தரித்து வைக்கப்படும் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்து கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

### (அ) வாகனப் பாவனை

கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் 4 பந்தியனது 4.1(அ)(i) ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறு வாகன விபத்துக்கள் / பழுதுபார்த்தல்கள், காப்புறுதி இழப்பீட்டைப் பெறுதல் சம்பந்தமாகவும் அந்த விபத்துக்கள் தொடர்பாக நி.பி 104 க்கமைய பரிசீலனைகளை மேற்கொண்டு, இழப்புகள் தொடர்பாகப் பொறுப்பானவர்களை நிச்சயித்து, இழப்பினது பெறுமதியை அறவிடுவதற்கு 2017 மே 15 ஆந் திகதியளவிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை.

### (ஆ) தலைவர்களும் நகரசபை அங்கத்தவர்களும் திருப்பி அளிக்காத பொருட்கள்

கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் 4 ஆம் பந்தியில் 4.1(ஈ) மூலமாகச் சுட்டிக் காட்டப்பட்டதன் பிரகாரம் தலைவருக்கும் நகர சபை அங்கத்தவர்களுக்கும் வழங்கப்பட்ட 06 கையடக்கத் தொலைபேசிகளையும் 01 ஜீஜ குழாயையும் 2017 மே 15 ஆந் திகதியளவிலும் திருப்பிப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### (இ) தீயணைப்புக் கூறும் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களும்

அம்புலன்சு வண்டிச் சேவையை வழங்குவதற்கான தொகையைப் பெறுவது கடன் அடிப்படையிலும் காசு அடிப்படையிலும் சபையின் தீர்மானமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத் தொகையைப் பெறுவதற்கு தீயணைப்புப் பிரிவினருக்கு வழங்கிய தற்காலிகப் பற்றுச்சீட்டுப் புத்தகத்திலிருந்து பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. இப்பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் மூலம் பணம் சேகரிக்கப்படுதல், முடிவடைந்த புத்தகங்களைத் திருப்பியளித்தல், மீண்டும் புத்தகங்களை வழங்குதல் என்பன தொடர்பாக எதுவித உள்ளகக் கட்டுப்பாடோ அல்லது மேற்பார்வையோ மேற்கொள்ளப்படாமையால் பெற வேண்டிய ரூபா 60,163 கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) தொலைந்த நூலகப் புத்தகங்கள்

நகர சபையால் நடாத்தப்படும் ஹொரன பொதுமக்கள் நூலகத்தில் ரூபா 3,396 பெறுமதியான 22 புத்தகங்களும் ரெடியல பஞ்ஞாசார தேரர் ஞாபகார்த்த பொதுமக்கள் நூலகத்தில் ரூபா 275 பெறுமதியான 03 புத்தகங்களும் கருணாசேன ஜயலத் ஞாபகார்த்த சிறுவர் நூலகத்தில் ரூபா 8,822 பெறுமதியான 40 புத்தகங்களும் தொலைந்து போனமை புத்தகங்களைப் பரிசீலித்தபோது இனங்காணப்பட்டிருந்த போதும், அவை தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**3.2 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்**

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக் கணக்கில் 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வரும் ரூபா 99,885 மீதியானது பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டின்போது ரூபா 5,200,445 செலவில் நிர்மாணிக்கப்பட்ட சோமானந்த மாவத்தை (பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையில்) கழிவறைத் தொகுதி மற்றும் குளியலறை ஆகிய இரண்டிலும் கழிவறைத் தொகுதி மாத்திரமே பொது மக்களது பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், குளியலரைத் தொகுதி எதுவித உபயோகமுமில்லாது வெறுமனே இருந்தது.

(இ) சபைக்குரிய 2 வாகங்களைப் பழுதுபார்த்தும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**3.3 காணிகளும் கட்டிடங்களும்**

நகர சபை நிலையான சொத்துக்களுக்கான பதிவேட்டைப் பேணியபோதும், நகர சபைக்குரிய சகல காணிகளும் கட்டிடங்களும் அதில் குறித்துக் கொள்ளப்பட்டிராததுடன், சபைக்குரிய சட்டபூர்வ உரித்துடைய உரித்துறுதியுடனான காணிகளும் கட்டிடங்களும் மாத்திரமே அதில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

மேலும் சபைக்குரிய காணிகளும் கட்டிடங்களும் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிறுவர் நூலகமும் சிறுவர் விளையாட்டு மைதானமும்

---------------------------------------------------------------------------------------------

இக் காணிக்கான உரித்துறுதி இருக்கவில்லை. விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதியில் வெளி நபர்கள் அத்துமீறியவாறு வர்த்தக நிலையங்களை அமைத்து வியாபரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

(ஆ) வேவல நூலகமும் முற்பள்ளிக் காணியும்

--------------------------------------------------------------------------

வெளி நபர்கள் 02 றூட், 24.05 பேர்ச்சஸ் உடைய இக்காணியில் ஏறக்குறைய 10 பேர்ச்சை அத்துமீறிக் கைப்பற்றியிருந்தனர். அவ்வாறு அத்துமீறிப் பெறப்பட்ட காணியைத் திருப்பிப் பெறுவதற்கான நடவடிக்கையை சபை மேற்கொள்ளவில்லை.

(இ) ரோயல் கார்டன்ஸ் (ஹொரனவத்த ஏல விற்பனைக் காணி)

---------------------------------------------------------------------------------------------------------

ஏல விற்பனைக் காணி ஒன்றிலிருந்து பொது வசதிகளுக்காகப் பெறப்பட்ட 02 றூட், 06 பேர்ச்சஸ் உடைய இக்காணியின் ஒரு பகுதியை அருகே அமைந்துள்ள காணியின் உரிமையாளர் கைப்பற்றி தனது வீட்டை விரிவுபடுத்தியிருந்தார். இது தொடர்பாகச் சட்டபூர்வ நடவடிக்கைளை மேற்கொண்டு அத்துமீறிக் கைப்பற்றிய நகர சபைக்குரிய காணியைத் திருப்பிப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) ரோஸ்வுட் வத்த

-----------------------------------

நகர சபை விளையாட்டு மைதானத்திற்கு அருகே உள்ள 03 ஏக்கா, 05 பேர்ச்சஸ் விசாலமுடைய இக் காணி 1971 ஆம் ஆண்டில் ஒப்படைப்பு உரித்துறுதி ஒன்றின் மூலம் பெறப்பட்டிருந்தது. நகரசபைக் கட்டிடத்திற்கும் நகர சபை ஊழியர்களுக்கும் மனைகளை அமைப்பதற்கென இக்காணி நகர சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தற்சமயம் இக்காணியில் நகர சபை ஊழியர்களும் அவர்களது பரம்பரையினரும் வெளி நபர்கள் சிலருமாக அத்துமீறியவாறு வீடுகளை அமைத்துக் குடியேறியிருந்தனர்.

(உ) ஹால்கல்கொடெல்ல காணி

----------------------------------------------------------

இக்காணி 01 ஏக்கர், 02 றூட், 13 பேர்ச்சஸ் விசாலமானது. இக்காணியில் பெருமளவிலானோர் வீடுகளை அமைத்துக் குடியேறியிருந்தனர். அத்துமீறிய குடியேற்ற வாசிகளை அப்புறப்படுத்துவதற்கு நகர சபை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

**3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

(அ) சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட இடங்களில் சேகரிக்கப்படும் உலராத கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு முறையான நடைமுறைகள் இல்லாமை மற்றும் அத்தொழிலை வெளி நபர்கள் மூலம் மேற்கொள்ளுதல் என்பவற்றால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பெருமளவில் நகர சபையால் ரூபா 6,319,970 செலவிடப்பட்டிருந்தது. இக்கிரயத்தை ஈடுசெய்வதற்கு கழிவுப் பொருட்களுக்கான வரியைப் பெறுவதற்கும் கழிவுப் பொருட்களுக்கான முகாமைத்துவத்திற்கு உப விதிகளை இயற்றுவதற்கும் நகர சபை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஆ) இக்காணி 01 ஏக்கர், 02 றூட், 27 பேர்ச்சஸ் விசாலமான இக் காணியின் ஒரு பகுதியில் நகர சபை சிற்றூழியர் ஒருவர் வீடமைத்திருந்தார். இது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அலுபோகஹவத்த காணியில் வேலைப் பிரிவு ஒன்றிற்கும் கழிவுப் பொருள் நிலையம் ஒன்றிற்கும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ் வேலைப் பிரிவு தற்போது பயனற்றிருப்பதுடன் கழிவுப் பொருள் நிலையத்தில் கழிவுகளை வெவ்வேறாக்கும் வேலை மாத்திரமே நடைபெற்றவாறிருந்தது. 2016 ஆம் ஆண்டில் மாத்திரம் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்காக நகரசபை செலவழித்திருந்த தொகை ரூபா 4,056,250 ஆகும். கழிவுகளை மீள்சுழற்சிக்குள்ளாக்கி கொம்போஸ்ட் உற்பத்தியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்
(உ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு